'நானும் என் வீட்டாரும் ஆண்டவருக்கே ஊழியம் செய்வோம்' (யோசு 24:15)

# நற்செய்திப் பணியாளர்

(சிவகங்கை மறைமாவட்ட தன்னார்வ நற்செய்திப் பணியாளர்களின் மாதச் செய்தி மடல்)

அருள் : XVII பிப்ரவரி கி.பி. 2026 சான்று : 194




## மனமாற்றம்



பரமக்குடி



சிவகங்கை



அமைதியகம்



பூதலூர்



கோட்டைக்காடு

## புதிய பணியாளர்கள் பயிற்சி



காளையார்கோவில்



செக்காலை



திருவாரூர்



புதுக்கோட்டை



ஆர்.எஸ் மங்கலம்



இராம்நாடு



சி.கே. மங்கலம்

# உங்கள் சகோதரனிடமிருந்து

**பாசத்திற்குரிய உடனுழைக்கும் நற்செய்திப் பணிக் குடும்பமே,**

என் அன்பார்ந்த சகோதர சகோதரிகளே, இதைத் தெரிந்து கொள்ளுங்கள். ஒவ்வொருவரும் கேட்பதில் வேகமும் பேசுவதிலும் சினம் கொள்வதிலும் தாமதமும் காட்ட வேண்டும் (யாக் 1:19) என்று வாழ வாழ்த்துகிறேன். அந்த வார்த்தை மூலம் கிடைக்கும் ஆசிகள் நம் அனைவருக்கும் கிடைக்க செபிக்கிறேன். ஏனென்றால் தம் படைப்புகளில் நாம் முதற் கனிகளாகும்படி உண்மையை அறிவிக்கும் வார்த்தையால் நம்மை ஈன்றெடுக்க கடவுள் விரும்புகிறார் (யாக் 1:18).

நம் கிறிஸ்தவ வாழ்வில், ஆவிக்குரிய வாழ்வில், முதிர்ச்சி அடைய இந்த நிபந்தனை மிக மிக அவசியம். அதிலும் சிறப்பான முறையில் இல்லம் சந்திப்பு களப்பணி புரிய மிகச்சிறந்த ஆலோசனையும் அமைகிறது. சமய பற்றுடையோர் என எண்ணிக் கொண்டிருப்போர் தம் நாவை அடக்காமல் இருப்பாரென்றால் தம்மையே ஏமாற்றிக் கொள்வார். இத்தகையோருடைய சமயப் பற்று பயனற்றது (யாக் 1: 26) என்று யாக்கோபு உறுதியாக கூறுகிறார். சமயப் பற்று என்பதற்கு ஆங்கில மொழிபெயர்ப்பில் Religious என்றும் சொல்லாம். இதற்கு நம்பிக்கையில் மிகச் சரியானவர், உண்மையானவர் நேர்மையாளர் என்றெல்லாம் பொருள் கொள்ளலாம். தான் சார்ந்து இருக்கிற வாழ்க்கை நெறியில் மிகுந்த பற்றுடையவர் என்றும் பொருள் கொள்ளலாம். அப்படிப்பட்டவர் தன் நாவை அடக்கவில்லை என்றால் அது பயனற்ற வாழ்வு என்றும தன்னையே ஏமாற்றும் வாழ்வு என்றும் அழுத்தமாகக் குறிப்பிடுகிறது.

நாவை அடக்க யாராலும் முடிவதில்லை. கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு அது கொடியது. சாவை விளைவிக்கும் நஞ்சு நிறைந்தது (யாக் 3:8) என்று கடுமையாக திருவிவிலியம் எச்சரிக்கிறது. இதே நாவை வைத்து அளப்பரிய சாதனைகள் செய்யலாம் என்பதும் கடவுளால் ஏற்படுத்தப்பட்ட மிகப்பெரிய அதிசயம். நல்லாரின் சொற்கள் தூய வெள்ளிக்கு சமம் ( நீமொ 10 :20) என்று நீதிமொழிகள் கூறுகிறது. அதே நேரத்தில் மட்டுக்கு மிஞ்சின பேச்சு, அளவற்ற தீமைகளை விளைவிக்கும். தன் நாவை அடக்குவோர் விவேகமுள்ளோர் (நீமொ 10 :19) என்றும் கூறுகிறது. நாம் பலமுறை நம் பேச்சைக் குறித்து 'இப்படி பேசியிருக்கக் கூடாது' என்று வருந்தி இருப்போம். நம் பேச்சினால் பல உறவுகள் உடைந்திருக்கும் அனுபவம் நமக்கு இருக்கும். பல்வேறு இடர்பாடுகளைச் சந்தித்திருப்போம். இன்றைக்கு உலக அளவில் நடக்கக்கூடிய தீமைகள், கொலைகள் எல்லாம் நாவடக்கம் இன்மைமையால்தான் நடக்கிறது.

வாழ்வதும் நாவாலே சாவதும் நாவாலே. வாயாடுவோர் பேச்சின் பயனை துய்ப்பர் (நீமொ 18 :21 ). நாவை அடக்குவது கடினமான ஒன்று என்று புனித யாக்கோபு சொல்லுகிறார். ஆகவே தான் அதை பாதுகாக்க கடவுள் 32 பற்களையும் இரண்டு உதடுகளையும் காவல் வீரர்களாக படைத்திருக்கிறார்

என்று வேடிக்கையாக சொல்வார்கள். நாவைக் குறித்து ஒரு வேடிக்கையான கதை ஒன்று சொல்வார்கள். ஒருவர் தன் சமையல்காரரிடம் ஆட்டிலே மிகவும் சுவையான பகுதியை சமைத்து எடுத்து வா என்று கட்டளையிட அவன் ஆட்டின் நாவை ருசியாகச் சமைத்து எடுத்து வந்தானாம். மிகவும் ருசியாக இருந்தது. சமைத்தவனுக்கு பாராட்டும் கிடைத்தது. மற்றொரு நாள் ஆட்டிலே இருக்கும் மோசமான பகுதியை சமைத்து எடுத்து வா என்றான். இம்முறை ஆட்டின் நாவையே சமைத்துக் கொண்டு வந்தான். அப்பொழுது முதலாளி அவனிடம், ஏனென்று கேட்டான். அதற்கு அவன் இந்த நாவு தான் எல்லாவற்றையும் கெடுக்கிறது. நாவு நன்மையும் பேசும். தீமையும் பேசும். ஆகையால் இதுதான் மோசமான பகுதி என்று கூறினானாம். இன்று பல குடும்பங்கள் சமாதானமின்றி பிரிந்து இருப்பது, நிம்மதி இன்றி வாழ்வது இந்த நாவடக்கம் இல்லாததால் தான். யாக்கோபு செவிமடுத்தலையும் பேசுதலையும் தனித்தனியாக கூட்டிக் காட்டுகிறார் (யாக்1: 19). 1. கேட்பதற்கு வேகமாக தீவிரமாக இருங்கள் (அதனால் தான் இரண்டு காதுகளைக் கடவுள் படைத்திருக்கிறார்) 2. பேசுவதற்கு தாமதமாக இருங்கள் (அதனால் தான் கடவுள் ஒரு வாயை படைத்திருக்கிறார்) . சினம் கொள்வதற்கு தாமதமாக இருங்கள் (ஆறிய கஞ்சி பழம் கஞ்சி) என்று அங்கே சொல்லப்பட்டு இருக்கிறது. புனித யாக்கோபு எழுதிய மூன்றாம் அதிகாரத்தை மீண்டும் மீண்டும் வாசித்து தியானிக்கும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இல்லம் சந்திக்கும் பணிக்கும் இந்த விதிமுறைகள் மிக மிக அவசியம்.

நீதிமொழிகள் நாவடக்கம் பற்றி பல இடங்களில் சிறப்பாக பேசுகிறது. சிந்தனையற்ற பேச்சு வாள் போல புண்படுத்தும். ஞானிகளின் சொற்களோ புண்களை ஆற்றும் (நீமொ 12: 18). நாம் பயன்படுத்தும் ஒவ்வொரு வார்த்தையும் பிறர் காயம் ஆற்ற வேண்டும். ஒருபோதும் பிறர் காயப்பட நம் பேச்சு காரணமாகி விடக்கூடாது என்பதில் மிகவும் கவனமாக இருப்போம். தக்க வேளையில் சொன்ன சொல் வெள்ளித்தட்டில் வைத்த பொற்கனிகளுக்குச் சமம் என்றும் இனிய சொல் எலும்பையும் நொறுக்கும் என்றும் மிகத் தெளிவாக இறைவார்த்தை சொல்லுகிறது. கெட்ட வார்த்தை எதுவும் உங்கள் வாயினின்று வரக்கூடாது. கேட்போர் பயனடையம்படி தேவைக்கேற்றவாறு, அருள் வளர்ச்சிக்கேற்ற நல்ல வார்த்தைகளை பேசுங்கள் (எபே 4: 29) என்று புனித பவுலடியார் தெளிவாக கூறுகிறார். நமக்கும் பிறருக்கும் பயன்படாத வார்த்தைகளை ஏன் பேச வேண்டும்? அதனால் எந்த நல்ல ஒரு பயனும் கிடையாதே?' நீ திரும்பி வந்தால், நான் உன்னை முன்னைய நிலைக்கு கொண்டு வருவேன். என் முன் வந்து நிற்பாய். பயனில நீக்கி பயனுள பேசின் நீ என் இறைவாக்கினனாக இருப்பாய் (எரே 15 :19) என்று எரேமியா நூலில் மிகத்தெளிவாக கடவுள் பேசியிருக்கிறார். சிறப்பாக இல்லம் சந்திப்பில் நாவடக்கத்தோடு செயல்படுவோம் . ஒருவர் ஒருவருக்காக செபிப்போம்.

உறவிலும் பணியிலும் உங்களோடு பயணிக்கும்

உங்கள் சகோதரன்

**நற்பணி அ. சகாயராஜா**

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - I பரமக்குடி அருள்சான்று நிலையத்தில் 4.01.2026 அன்று நடைபெற்றது. இப்பயிற்சியில் 5 நபர்கள் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி K. ஜஸ்டின் கபிரியேல், நற்பணி M. அருள் மரியநாயகம் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - II காளையார்கோவில், தந்தை. ஜோசப் சேவியர் அரங்கில் 4.01.2026 அன்று நடைபெற்றது. இப்பயிற்சியில் 3 நபர்கள் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி P. சகாயராணி, நற்பணி V.செங்கோல்மேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி -III தங்கச்சிமடம், புனித குழந்தை தெரசாள் கோவிலில் 10.01.2026 அன்று நடைபெற்றது. இப்பயிற்சியில் 17 நபர்கள் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி J. மேரிபுஷ்பம், நற்பணி. X. லூர்துமேரி, ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - IV இராமநாதபுரம், புனித செபமாலை அன்னை கோவிலில் 11.01.2026 அன்று நடைபெற்றது. இப்பயிற்சியில் 4 நபர்கள் கலந்து கொண்டனர் இப்பயிற்சியை நற்பணி J. மேரிபுஷ்பம், நற்பணி. நற்பணி பெ. தெரசா மிரண்டா ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி - V சிவகங்கை, வியான்னி அருள்பணி மையத்தில் 11.01.2026 அன்று நடைபெற்றது. இப்பயிற்சியில் 7 நபர்கள் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி G.M.S. ராணி, நற்பணி M. சகாயமேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி - VI ஓரியூர் புனித அருளானந்தர் திருத்தலத்தில் 11.01.2026 அன்று நடைபெற்றது. இப்பயிற்சியில் 4 நபர்கள் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி J. அருள் இளங்கோ, நற்பணி கோ. அம்பிகா எலியாஸ், நற்பணி இரா அருள்பிரகாசம் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - VII அமைதியகம், காயாவயலில் 18.01.2026 அன்று நடைபெற்றது. இப்பயிற்சியில் 7 நபர்கள் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை Sr. செலின்பிரபா, நற்பணி தை.அமல்ராஜா, நற்பணி A. ஜான்சிமேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - VIII சாயல்குடி, புனித ஆரோக்கிய அன்னை ஆலயத்தில் 18.01.2026 அன்று நடைபெற்றது. இப்பயிற்சியில் 6 நபர்கள் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி G. ஜெனிபர், நற்பணி A. அடைக்கலம், ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - IX சி.கே. மங்கலம், புனித பேதுரு ஆலயத்தில் 18.01.2026 அன்று நடைபெற்றது. இப்பயிற்சியில் 6 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி A. சகாய தமிழ் செல்வி. நற்பணி J. சார்லஸ் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - X இராசசிங்கமங்கலம், தூய ஆவியார் ஆலயத்தில் 25.01.2026 அன்று நடைபெற்றது. இப்பயிற்சியில் 6 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி M.விசுவாசம் நற்பணி A. ஜான்சிமேரி, நற்பணி S. தைனஸ்மேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

# கடந்த மாதச் செயல்பாடுகள்

2& 3.01.2026 ஆகியநாட்களில் அமலவை சபை இறுதி அர்ப்பண தயாரிப்பில் உள்ள சகோதரிகளுக்கு நற்செய்தி அறிவிப்புப் பணி பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி சகாயராஜா, நற்பணி மரியகிரகோரி மற்றும் செயலர் வழிநடத்தினர். இப்பயிற்சியை தொடர்ந்து நானக்குடி பங்கில் ஒரு வார கணப்பணியாற்றினர். அதே நாளில் துறவற வாழ்வில் வெள்ளிவிழா தயாரிப்பில் உள்ள களப்பணியாற்றிய அருள் சகோதரிகளுக்கு களப்பணி திறனாய்வு நடைபெற்றது.

03.01.2026 அன்று திரு இருதய ஆண்டவர் திருத்தலம் பரிந்துரை செபத்தில் சருகனி வட்டாரப் பணியாளர்கள் நற்பணி பிரகாசம், நற்பணி சகாயமேரி, நற்பணி ஆரோக்கியசாமி ஆகியோர் பங்கேற்றனர்.

04.01.2026 அன்று புதுக்கோட்டை திரு இருதய கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி J. மேரிபுஷ்பம், நற்பணி நற்பணி G.M.S. ராணி ஆகியோர் வழிநடத்தினார்கள்

04.01.2026 அன்று கோட்டைக்காடு புனித சூசையப்பர் கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி A.R.சூசைராஜ், நற்பணி மோட்ச அலங்காரம் ஆகியோர் வழிநடத்தினார்கள்

07.01.2026 அன்று காயாவயல் அமல அன்னை அமைதியகத்தில் அருளமுது ஆதாரக் கூடுகை நடைபெற்றது. 35 பேர் இணைந்து செபித்த இவ்வழிபாட்டை நற்பணி M. விசுவாசம், நற்பணி, தைனஸ்மேரி நற்பணி. அம்பிகா ஆகியோர் வழிநடத்தினர்கள்.

07.01.2026 அன்று அருள்சான்று நிலையத்தில அருளமுது ஆதாரக் கூடுகை நடைபெற்றது. 95 பேர் இணைந்து செபித்த இவ்வழிபாட்டை நற்பணி M.மரிய கிரகோரி, நற்பணி, GMS ராணி நற்பணி. சாந்தி ஆகியோர் வழிநடத்தினர்கள்.

11.01.2026 அன்று பட்டுக்கோட்டை, உலக இரட்சகர் கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி நற்பணி A. சத்தியேந்திரன், நற்பணி A. ஆரோக்கியசாமி, ஆகியோர் வழிநடத்தினார்கள்

11.01.2026 அன்று பூதலூர், புனித மரியன்னை கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி A. அந்தோனி பிரகாஷ், நற்பணி A. ஆரோக்கியசாமி ஆகியோர் வழிநடத்தினார்கள்

18.01.2026 அன்று அம்மாபேட்டை, புனித வளனார் கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி S. மோட்ச அலங்காரம் நற்பணி |L ஆரோக்கியசாமி ஆகியோர் வழிநடத்தினார்கள்

18.01.2026 அன்று திருமயம், புனித அடைக்கலமாதா கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி A. அந்தோனி பிரகாஷ், நற்பணி M. லூயி ஜான்போஸ்கோ ஆகியோர் வழிநடத்தினார்கள்

18.01.2026 அன்று திருவாரூர். புனித பாத்திமா அன்னை கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி S. ஹென்றி. நற்பணி A.R.ஆசைராஜ் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

18.01.2026 அன்று நமணசமுத்திரம். குழந்தை இயேசு கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி A. சகாயராஜா. நற்பணி S. சகாயராணி அவர்கள் நெறிபடுத்தினார்கள்.

## சனவரி 2026 வட்டார தியானக் கூட்டங்கள்

**செஞ்சை வட்டாரம்**

செஞ்சை வட்டாரக் கூட்டம் 04.01.2026 அன்று செஞ்சை சிறுமலர் பள்ளியில் காலை 11.00 மணிக்கு பணியாளர்களின் தொடக்க வழிபாட்டுடன் ஆரம்பமானது. 37 பணியாளர்கள் கலந்து கொண்ட இந்த சிறப்புத் தியானத்தை செயலர் தொடர்பாளராக கலந்து கொண்டு 'பணிவாழ்வு' குறித்து செய்தி மற்றும் செயல்முறைப் பயிற்சிகள் வழியாக நெறிப்படுத்தினார்கள். பரிந்துரை செபத்துடன் 04.00 மணிக்கு கூட்டம் நிறைவுற்றது.

நற்பணி. **விசுவாசம் ,** வட்டாரக் கண்காணிப்பாளர்

**கமுதி வட்டாரம்**

கமுதி வட்டாரத் தியானக் கூட்டம் 11.01.2026. ஞாயிற்றுக் கிழமை காலை 10.30 மணிக்கு கே.எம். கோட்டை நற்பணி அருள் மரிய நாகம் இல்லத்தில் நடைபெற்றது. 'நற்செய்திப் பணியாளர்களின் பணி வாழ்வு' என்ற மையச் சிந்தனையில் செயலர் நெறிப்படுத்தினர். குழு ஆய்வு மற்றும் இல்ல சந்திப்புச் செயல்முறைப் பயிற்சிகள் நடைபெற்றன. 17 பேர் பங்கேற்றனர். இறுதியாக கொள்கைப் பாடலுடன் தியானம் மாலை 04.00 மணிக்கு நிறைவுற்றது.

நற்பணி **T. மைக்கேல்,** வட்டாரக் கண்காணிப்பாளர்.

**இராம்நகர் வட்டாரம்**

இராம்நகர் வட்டாரக் கூட்டம் 18.01.2026 அன்று அமைதியகத்தில் காலை பத்து மணிக்கு புகழ்ச்சி வழிபாட்டுடன் தொடங்கியது. தொடர்பாளராக நற்பணி மரிய கிரகோரி கலந்து கொண்டு 'நற்செய்திப் பணியாளர்களின் பணி வாழ்வு' என்னும் தலைப்பில் செய்தி வழங்கினார். மதிய உணவுக்குப் பின் ஐந்து குழுக்களாக பிரிக்கப்பட்டு இல்ல சந்திப்பு செய்முறை பயிற்சி நடைபெற்றது. 28 பணியாளர்கள் கலந்து கொண்டனர். மாலை நான்கு மணிக்கு கூட்டம் நிறைவுற்றது.

நற்பணி. **எஸ். ஆரோக்கியசாமி,** வட்டாரக் கண்காணிப்பாளர்..

**சிவகங்கை வட்டாரம்**

சிவகங்கை வட்டாரச் சிறப்புத் தியானக் கூட்டம் 18.01.2026 அன்று வல்லாணை நற்பணி ஜெயசீலன் இல்லத்தில் வட்டார நற்செய்திப் பணியாளர்களின் தொடக்க வழிபாட்டுடன் காலை 11.00 மணிக்கு ஆரம்பமானது. செயலர் தொடர்பாளராக கலந்து கொண்டு 'நற்செய்திப் பணியாளர்களின் பணிவாழ்வு' என்ற மையச் சிந்தனையில் இறைச்செய்தி வழங்கினார். நண்பகல் உணவிற்குப்பின் குழு ஆய்வும். செய்முறைப் பயிற்சியும் நடைபெற்றன. 24 பணியாளர்கள் பங்கேற்ற இத்தியானம் 04.00 மணிக்கு பரிந்துரை செபத்துடன் நிறைவுற்றது.

நற்பணி. **ஜோசப் இருதயராஜ் ,** வட்டாரக் கண்காணிப்பாளர்.

**சாலைகிராமம் வட்டாரம்**

சாலைகிராமம் வட்டாரத் தியானக் கூட்டம் 25.01.2026 ஞாயிற்றுக்கிழமையன்று இளையான்குடி நற்பணி செல்லத்துரை. நற்பணி சகாயம் இல்லத்தில் காலை 10.30 மணிக்கு வட்டாரப் பணியாளர்களின் தொடக்க வழிபாட்டுடன் ஆரம்பமானது. செயலர் தொடர்பாளராகக் கலந்து கொண்டு 'நற்செய்திப் பணியாளர்களின் பணிவாழ்வு' என்ற மையச் சிந்தனையில் செய்தி வழங்கி நெறிப்படுத்தினார். நண்பகல் உணவிற்குப்பின் குழு ஆய்வும். செய்முறைப் பயிற்சியும் நடைபெற்றன. 28 பணியாளர்கள் பங்கேற்ற இத்தியானம் 04.00 மணிக்கு பரிந்துரை செபத்துடன் நிறைவுற்றது.

நற்பணி. **ஜோன்ஸ் மேரி,** வட்டாரக் கண்காணிப்பாளர்.

இயேசு கிறிஸ்து ஆண்டவர் என எல்லா நாவுமே அறிக்கையிடும் (பிலி 2:11)

நம் ஆண்டவர் மீது நம்பிக்கை வைத்து அவரது பெயரை அறிக்கையிடுவதன் வாயிலாக எத்தனை அருள்கொடைகள் நமக்கு கிடைக்கின்றன என்பதை எண்ணிப் பார்ப்போம். முதலாவது இயேசுவே ஆண்டவர் என்று நாம் அறிக்கையிடும்போது மீட்பு பெறுகிறோம். (உரோ 10:9-10) இரண்டாவது. இவ்வாறு நாம் அவரை அறிக்கை செய்து அவர் மீ நம்பிக்கை வைத்து அவரை ஏற்றுக்கொள்ளும்போது நாம் கடவுளின் பிள்ளைகளாகும் உரிமையை அவர் நமக்குத் தருகிறார் (யோவா 1:12). மூன்றாவது. நாம் கடவுளின் பிள்ளைகள் ஆனதால் புதுப்படைப்பாக மாறுகிறோம். பழையன கழிந்து புதியன புகுந்தது (2 கொரி 5:17). இப்போது நாம் சட்டத்திற்கு உட்பட்டவர்கள் அல்ல (உரோ 6:14). இந்த மீட்பு நம் சொந்த முயற்சியால் கிடைத்ததல்ல அல்லது நம்முடைய நற்செயல்களாலும் அல்ல. மாறாக நாம் இயேசு ஆண்டவரை அறிக்கை செய்து அவர்மீது வைக்கும் நம்பிக்கையினால் அந்த அருளால் மீட்கப்படுகிறோம். இது கடவுளின் மாபெரும் கொடை. இதில் எவரும் பெருமை பாராட்ட இடமில்லை (எபே 2:8-9). நமக்கு மீட்பை அளித்துள்ள இந்த ஒப்பற்ற அருள்செல்வதைப் பற்றி சற்று அறிந்து கொள்வோம். நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் அருள்செயலை அறிந்திருக்கிறீர்களே! அவர் செல்வராயிருந்தும் உங்களுக்காக ஏழையானார். அவருடைய ஏழ்மையினால் நீங்கள் செல்வராகுமாறு இவ்வாறு செய்தார் (2 கொரி 8:9). நாம் கடவுளின் பிள்ளைகளாய் இருப்பதால் இந்த மாபெரும் அருள்செயலை அறிந்திருக்க வேண்டும். எனவே தான் நம் ஆண்டவரின் அருள் செயலை அறிந்திருக்கிறீர்களே என்று பவுல் குறிப்பிடுகிறார் (2 கொரி 8:9). இந்த மாபெரும் அருள் செயல் எந்த மனித முயற்சியாலும் நமக்கு கிடைக்கவில்லை. அது கடவுளால் மறைபொருளாக இருந்து நமக்காக வெளிப்படுத்தப்பட்டது. திருச்சட்டம் மோசே வழியாகக் கொடுக்கப்பட்டது. அருளும் உண்மையும் இயேசு கிறிஸ்து வழியாய் வெளிப்பட்டன (யோவா 1:17). மனிதர் அனைவருக்கும் மீட்பராம் கடவுளின் அருள் வெளிப்பட்டுள்ளது. நம் இறைப்பற்றின்மையும் உலகு சார்ந்த தீய நாட்டங்களையும் மறுத்துக் கட்டுப்பாடுடனும் நேர்மையுடனும் இறைப்பற்றுடனும் இம்மையில் வாழ இவ்வருளால் பயிற்சிப் பெறுகிறோம் (தீத் 1:11-12). இந்த மாபெரும் அருள்செயலைக் குறித்து நாம் ஏன் பெருமைகொள்ள முடியாது? அவர் நம் செயல்களை முன்னிட்டு அல்ல காலங்களுக்கு முந்திய தமது தீர்மானத்தின்படி கிறிஸ்து இயேசுவழியாக நமக்கு அளிக்கப்பட்ட அருளின்படி நம்மை மீட்டுள்ளார் (2 திமொ 1:9). நம் கடவுளின் அருள் செல்வம் எத்துணை வியக்கத்தக்கது என்பதை உணர்ந்த பவுல். இது உலக ஞானம் அல்ல உலகத் தலைவர்களின் ஞானமும் அல்ல. வெளிப்படுத்தப்படாமல் மறைபொருளாய் இருக்கும் இறை ஞானத்தைப் பற்றியே நாங்கள் பேசுகிறோம். அது நாம் மேன்மை பெறவேண்டும் என்னும் நோக்குடன் உலகம் தோன்றும் முன்பே கடவுளின் திட்டத்தில் இருந்தது என்று மிகவும் தெளிவாகக் குறிப்பிடுகிறார் (1கொரி 2:6-7).

நாம் அறிக்கையிடுகின்ற ஆண்டவர் இயேசுவுக்குள் கடவுளின் அருள் செல்வம் எத்துணை மிகுதியானது; மறைந்துள்ளதை எண்ணிப் பார்ப்போம். ஞானமும் அறிவுமாகிய செல்வங்கள் அனைத்தும் கிறிஸ்துவில் மறைந்துள்ளன (கொலோ2:3). கடவுளின் அருள் செல்வம் எத்துணை மிகுதியானது; அவருடைய ஞானமும் அறிவும் எத்துணை ஆழமானவை; அவருடைய தீர்ப்புகள் அறிவுக்கு எட்டாதவை; அவருடைய செயல்முறைகள் ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்டவை (உரோ 11:33). நாம் நமது ஆண்டவர் இயேசுவை நம்பிக்கையோடு அறிக்கை செய்யும்போது கடவுளின் இந்த வியக்கத்தக்க அருள் செல்வங்கள் நம்முள் செயல்பட ஆரம்பிக்கின்றன. இன்றைக்கு வெளி அடையாளங்களை அதிகம் தேடுவதால் நமக்குள் செயல்படக் கூடிய கடவுளின் அருள் செயல்களை நம்மால் காணமுடிவதில்லை. எனவே தான் கடவுளுடைய அழைப்பு உங்களுக்கு எத்தகைய எதிர்நோக்கைத் தந்துள்ளது என்றும், இறைமக்களுக்கு அவர் அளிக்கும் உரிமைப்பேறு எத்துணை மாட்சிமிக்கது என்றும் அவர்மீது நம்பிக்கை கொள்பவர்களாகி நம்மிடம் செயலாற்றுகிற அவரது வல்லமை எத்துணை ஒப்புயர்வு அற்றது, மேலானது என்றும் நீங்கள் அறியுமாறு உங்கள் அகக்கண்கள் ஒளியூட்டப் பெறுவனவாக என்று நம்மை வாழ்த்துகிறார் (எபே 1:18-19). மேலும் நம்முள் வல்லமையோடு செயல்படுபவரும் நாம் வேண்டுவதற்கும் நினைப்பதற்கும் மிகவும் மேலாக அனைத்தையும் செய்ய வல்லவருமான கடவுளுக்கு திருச்சபையில் கிறிஸ்து இயேசு வழியாய்த் தலைமுறை தலைமுறையாக என்றென்றும் மாட்சி உரித்தாகுக. ஆமென் என்று கூறியிருப்பதை கவனிப்போம் (எபே 3:20-21). எத்துணை வியக்கத்தக்க அனுபவம் என எண்ணிப் பார்ப்போம். நாம் அருளின் ஆட்சிக்கு உட்பட்டிருப்பதால் இப்போது அவர் நம் வழியாக நமக்குள் இருந்து செயலாற்ற விரும்புகிறார். நம் ஆண்டவர் சொல்லும் ஆமென் வழியாக கடவுள் அருளும் எல்லா வாக்குறுதிகளும் நிறைவேறுகின்றன. அதனால்தான் நாம் கடவுளைப் போற்றி புகழும்போது அவர் வழியாக ஆமென் எனச் சொல்கிறோம் (2கொரி 1:20). எனவேதான் எதைச் சொன்னாலும், எதைச் செய்தாலும், அனைத்தையும் ஆண்டவர் இயேசுவின் பெயரால் செய்து அவர் வழியாய்த் தந்தையாம் கடவுளுக்கு நன்றி செலுத்துங்கள் என்று பவுல் நமக்கு அறிவுரைத் தருகிறார் (கொலோ 3:17). நம் அன்னை மரியா இந்த அருள் செல்வத்தை மிகுதியாகப் பெற்றார்கள் (லூக் 1:28) மிகுந்த வேதனையோடு கேட்டபோது என் அருள் உனக்குப் போதும் என்று கூறி பவுலை ஆண்டவர் தேற்றினார் (2 கொரி 12:9). எனவே எங்கும் எல்லாவற்றையும் நிரப்புகின்ற அவரது பெயரை அறிக்கை செய்து நம்முள் வல்லமையோடு செயல்படும் அவரது அருள் செயலை நாம் கண்டு உணருமாறு நம் மனக்கண்கள் திறக்கப்பட நம்மையே அவரிடம் அர்ப்பணிப்போம்.

நற்பணி **ம.விசுவாசம்,** செஞ்சை.

# நீதியின் பொருட்டு துன்பம்

நீதியினால் வரும் துன்பம் புதிதாய் உண்டானது அல்ல. ஆதாமின் மகன் ஆபேலின் காலத்திலேயே ஆரம்பமாகிவிட்டது (1 யோவா 3:12). மோசே தன் சொந்த மக்களால் நிந்திக்கப்பட்டார் (விப 14:11, 16:2, 17:2); சாமுவேல் புறக்கணிக்கப்பட்டார் (1 சாமு 8:5.6); எலியா துன்புறுத்தப்பட்டார் (1 அரச 19:2). மீக்கா வெறுக்கப்பட்டார் (2 குறி 18:23); நெகேமியா ஒடுக்கப்பட்டார் (4:1.2).

இன்னும் இறை நம்பிக்கை கொண்டோர் அடைந்த துன்பங்களுக்கு அளவேயில்லை. உயிர்த்தெழுந்து சிறப்புறும் பொருட்டு, சிலர் விடுதலை பெற மறுத்து வதையுண்டு மடிந்தனர். வேறு சிலர் ஏளனங்களுக்கும் கசையடிகளுக்கும் ஆளாயினர். விலங்கிடப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். இரண்டாக அறுக்கப்பட்டனர். வாளுக்கு இரையாகி மடிந்தனர். செம்மறியின் தோலையும் வெள்ளாட்டுத் தோலையும் போர்த்திக்கொண்டு அலைந்து திரிந்தனர். வறுமையுற்று வாடினர். துன்புறுத்தப்பட்டனர். கொடுமைக்கு உள்ளாயினர். அவர்களை ஏற்க இவ்வுலகுக்குத் தகுதியில்லாமல் போயிற்று. மலைகளிலும், குகைகளிலும், நிலவெடிப்புகளிலும், பாலைவெளிகளிலும் அவர்கள் அலைந்து திரிந்தார்கள் (எபி 11:35-38). ஸ்தேவான கல்லெறியப்பட்டார் (திப 7:59) பேதுரு, யோவான், யாக்கோபு, பவுல் ஆகிய எல்லா திருத்தூதர்களும் துன்புறுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டார்கள்.

> 'உனக்கு வரவிருக்கின்ற துன்பத்தைப் பற்றி அஞ்சாதே. (திவெ 2:10)

தந்தையாம் கடவுளுக்கு சமமானவர், பாவமில்லாத தூயவர், பாடுகள் நிறைந்த மனிதனாக இப்பாவ உலகிற்கு வந்து, ஒரு ஏழைக்குடும்பத்தில் பிறந்தார் என்பதும், அவர் மனிதரால் புறக்கணிக்கப்பட்டு, அவமானப்பட்டு, பாடுகள்பட முன் வந்தாரென்பதும் மனித அறிவை நிலைகுலையச் செய்கிறது. எத்தனையோ முறை கல்லெறிந்து கொல்ல முயற்சிகள் நடந்தன. ஒரு கொடூரமான கொலைகாரன் விடுதலையாக்கப் பட்டும் என்று சொல்லுமளவுக்கு (யோவா 8:40) இயேசுவை வெறுத்தார்கள். ஆனால், இயேசு கிறிஸ்துவோ எங்கும் நன்மையே செய்து வந்தார். பாவமே இல்லாத தூயவருக்கு இவ்வுலகம் கொடுத்த வெகுமதி கொடூரமான சிலுவைச் சாவு. இயேசு தாம் அடையவிருந்த மகிழ்ச்சியின் பொருட்டு, இழிவையும் பொருட்படுத்தாமல் சிலுவையை ஏற்றுக்கொண்டார் (எபி 12:2). ஆக, இயேசு கிறிஸ்து நமக்காகத் துன்புற்று ஒரு முன் மாதிரியை வைத்துச் சென்றுள்ளார் (1 பேது 2:20-21). இவ்வாறே, நாமும் நம்முடைய பாடுகள் மூலம் கிறிஸ்துவோடு இணைக்கப்படும் மேலான பேற்றைப் பெற்றுக் கொள்கிறோம். கிறிஸ்துவைப் போல

துன்புறுத்தப்படுவதினால் அவருக்குரியவர்கள் என்பது நிரூபணமாகிறது. நீதியினால் வரும் துன்பம், மிகுந்த மேன்மையைத் தருவதினால், அதை நினைத்து மகிழ்ந்து பேருவகை கொள்ளவேண்டும்.

குற்றங்கள் பல செய்து, அதன்பொருட்டு பலர் துன்புறுத்தப்படுகின்றனர். ஆகையால், நீங்கள் செய்த தீமையின் பொருட்டு துன்புறுத்தப்படுவதல்ல. மாறாக, நீதியின் பொருட்டும், இயேசு கிறிஸ்துவின் பொருட்டும் துன்புறுத்தப்படுவோரே, பேறுபெற்றோர்(மத் 5:10-11). அவர்களுக்கே விண்ணுலகில் கைமாறு கிடைக்கும். குற்றம் செய்ததற்காக நீங்கள் அடிக்கப்படும்போது பொறுமையோடு இருப்பதில் என்ன சிறப்பு? மாறாக, நன்மை செய்தும் அதற்காகப் பொறுமையோடு துன்புற்றால், அது கடவுளுக்கு உகந்ததாகும் (1பேது 2:20).

**பேறுபெற்றோர்:**

'நீதியின் பொருட்டுத் துன்புறுத்தப்படுவோர் பேறு பெற்றோர்' (மத் 5:10) என்று கூறிய இயேசு கிறிஸ்து, தொடர்ந்து 'என் பொருட்டு மக்கள் உங்களை இகழ்ந்து, துன்புறுத்தி, உங்களைப் பற்றி இல்லாதவை பொல்லாதவையெல்லாம் சொல்லும்போது நீங்கள் பேறுபெற்றவர்களே' (மத் 5:11) என்று கூறி, நீதியையும், தன்னையும் ஒன்றாக்கிக் கொள்கிறார். ஏனெனில், இயேசுவே 'நமது நீதியாக' (யாவே சித்கேனு எரே 23:6) இருக்கிறார் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

> 'நீதியின் பொருட்டுத் துன்புறுத்தப்படுவோர் பேறு பெற்றோர்' (மத் 5:10)

இயேசு கிறிஸ்து சீடர்களைப் பார்த்து என் பொருட்டு உங்களுக்குத் துன்பம் உண்டு. 'உலகம் உங்களை வெறுக்கிறதென்றால், அது உங்களை வெறுக்கும் முன்னே என்னை வெறுத்தது என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள். நீங்கள் உலகைச் சார்ந்தவர்களாக இருந்திருந்தால் தனக்குச் சொந்தமானவர்கள் என்னும் முறையில் உலகு உங்களிடம் அன்பு செலுத்தியிருக்கும். நான் உங்களை உலகிலிருந்து தேர்ந்தெடுத்துவிட்டேன். நீங்கள் உலகைச் சர்ந்தவர்கள் அல்ல. எனவே, உலகு உங்களை வெறுக்கிறது' (யோவா 15:18-20) என்று கூறினார். ஆகவே, கிறிஸ்துவின் பொருட்டுப் பிறர் உங்கள் மீது வசை கூறும் போது நீங்கள் பேறுபெற்றவர்கள். ஏனெனில், கடவுளின் மாட்சிமிக்க தூய ஆவியின் வல்லமை உங்கள்மேல் தங்கும் (1பேது 4:14)

**கடவுளின் மாட்சி.**

கிறிஸ்தவக் குடும்பங்களில் பிறந்து, வெளிப்படையான கடமைகளை மட்டும்

பொருட்டுத் துன்பம் ஏற்படப்போவதில்லை. இவ்வுலகின் எல்லா இன்பங்களையும் அனுபவித்துவிட்டு கிறிஸ்தவக் கல்லறைகளை மட்டும் உரிமையாக்கி கொள்கிறவர்கள். இப்படிப்பட்டவர்கள் விண்ணுலக வாழ்வை உரிமையாக்கிக்கொள்ள முடியாது. நம்முடைய முதன்மையான நோக்கம் விண்ணுலக வாழ்வை எப்படி உரிமையாக்கிக் கொள்வது என்பதாகத்தான் இருக்கவேண்டும்.

இறைப்பற்றுடன் வாழ விரும்புவோர் அனைவரும் இன்னலுறுவர் (2 திமோ 3:12). ஆனாலும், நமக்கு வரும் துன்பங்கள் மிக எளிதில் தாங்கக் கூடியவை. அவை சிறிது காலம்தான் நீடிக்கும். ஆனால், அது ஈடு இணையற்ற மாட்சியை விளைவிக்கின்றன. ஆகையால்தான், தூய பவுல் தனது பாடுகளைப் பட்டியலிட்டு (2 கொரி 11:23-28) துன்பங்களைத் தாங்கிக் கொள்வதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன் (உரோ 5:3) என்கிறார். ஆகவே இக்காலத்தில் படும் துன்பங்கள் எதிர்காலத்தில் நமக்காக வெளிப்பட்டபோகிற மாட்சியோடு ஒப்பிடத் தகுதியற்றவை என எண்ணுகிறேன் ரோ 8:18) என்று பெருமிதம் கொள்கிறார்.

அன்புக்குரியவர்களே, துன்பத் தீயில் நீங்கள் சோதிக்கப்படும்போது, ஏதோ எதிர்பாராதது நேர்ந்துவிட்டதென வியக்காதீர்கள். மாறாக, கிறிஸ்துவின் துன்பங்களில் நீங்கள் இத்துணைப் பங்கு கொள்கிறீர்கள் என்று எண்ணி மகிழுங்கள். அப்பொழுது, கிறிஸ்துவின் மாட்சி வெளிப்படும் வேளையில் இன்னும் மகிழ்ந்து பேருவகை கொள்வீர்கள் (1பேது 4.12-13).

ஆகவே, எல்லா அருளும் நிறைந்த கடவுள் இயேசு கிறிஸ்துவுக்குள் என்றும் நிலைக்கும் தம் மாட்சியில் பங்குகொள்ள உங்களை அழைத்திருக்கிறார். சிறிதுகாலம் துன்பங்களுக்குப் பின் அவர் உங்களை சீர்படுத்தி, உறுதிப்படுத்தி, வலுப்படுத்தி நிலைநிறுத்துவார் (1பேது 5:10). கடவுளது வல்லமை என்றென்றும் உள்ளது. 'உனக்கு வரவிருக்கின்ற துன்பத்தைப் பற்றி அஞ்சாதே. இறக்கும்வரை நம்பிக்கையோடு இரு அவ்வாறாயின் வாழ்வை உனக்கு முடியாகச் சூட்டுவேன்' (திவெ 2:10) என்கிறார் ஆண்டவர்.

நற்பணி **ஆரோக்கியசாமி.ஜே**

| வித்தியாசமான எண்களும் அத்தியாவசியமான இறைவார்த்தைகளும் | |
|---|---|
| இச்சட்டநூலின் நகல் ஒன்றைத் தனக்கென ஓர் ஏட்டில் எழுதிக் கொள்ளட்டும். அதைத் தன்னோடு வைத்துக்கொள்ளட்டும். அதை நாள்தோறும் அவன் வாழ்நாள் முழுவதும் வாசிக்கட்டும். அதனால், அந்தச் சட்டத்தின் எல்லா வார்த்தைகளையும், அதன் நீதிமுறைகளையும் நிறைவேற்றுதவன் மூலம் அவன் கடவுளாகிய ஆண்டவருக்கு அஞ்சி நடக்கக் கற்றுக் கொள்வான். | **இணைச் சட்டம் 17:18,19** |

'எந்நிலையிலும் நம்பிக்கையென்னும் கேடயத்தைப் பிடித்துக் கொள்ளுங்கள் அதைக் கொண்டு தீயோனின் தீக்கணைகளையெல்லாம் அணைத்து விட முடியும்' (எபே6:16).

உண்மையான கிறிஸ்தவ வாழ்வு வாழ நம் ஒவ்வொருவருக்கும் துணையாக இருப்பது நமது இறை நம்பிக்கை. இறை நம்பிக்கையில் நிலைத்து நிற்பதற்கு நமக்கு தேவையான ஆதாரமாக இருப்பது இறை அனுபவம்தான். புனித பவுல் கூறுவது போல நம் வாழ்வில் உதையும் சந்திக்கும் போதும், கடந்து வரும்போதும் நம்பிக்கை என்னும் கேடயத்தைப் பிடித்துக் கொண்டிருந்தால்தான் நாம் வீழ்ந்து விடாமல் காப்பாற்றப்படுவோம். அதை வலியுறுத்தி தான்'எந்நிலையிலும் நம்பிக்கை என்னும் கேடயத்தைப் பிடித்துக் கொள்ளுங்கள்' (எபே6:16) என்று அழுத்தமாகக் கூறுகின்றார்.

இறை அனுபவத்தைச் சுவைத்து வாழும் நம்பிக்கையாளர்கள் எதற்கும், யாருக்கும் அச்சப்பட மாட்டார்கள். 'எதுவரை இம்மக்கள் என்னை இழிவுபடுத்துவார்கள் நான் அவர்களுக்கு அடையாளங்கள் தந்தும் எதுவரை அவர்கள் என்னில் நம்பிக்கை கொள்ளாதிருப்பார்கள்?' (எண் 14:11) என்று மோசையிடம் ஆண்டவர் பேசுகிறார். நாம் நம்பிக்கை இல்லாமல் வாழும் பொழுது ஆண்டவரை இழிவு படுத்துவதாக ஆண்டவரே கூறுகின்றார். நான் அவர்களுக்கு அடையாளங்கள் தந்தும் எதுவரை இவர்கள் என்னில் நம்பிக்கை கொள்ளாதிருப்பார்கள் என்ற வார்த்தையின் வழியாக ஆண்டவரின் ஏக்கத்தையும், ஆதங்கத்தையும் நாம் புரிந்து கொள்ள முடிகின்றது. இன்றைக்கும் நம் வாழ்வில் ஆண்டவர் எத்தனை விதமான வியக்கத்தக்க காரியங்களை நம் தனிப்பட்ட வாழ்விலும், நம் குடும்பத்திலும், நமக்கு அன்பானவர்கள் வாழ்விலும் செய்திருக்கின்றார் என்பதை நினைவுப்படுத்திப் பார்ப்போம். இத்தனை நன்மைகளையும் அடையாளங்களையும் நாம் பெற்றிருந்தும் நம்பிக்கையற்று வாழும் போது நாமும் ஆண்டவர் பார்வையில் அவரை இழி படுத்துகிறோம் அல்லவா?

'உமது பெயரை அறிந்தோர் உம்மில் நம்பிக்கை கொள்வர்; ஆண்டவரே, உம்மை நாடி வருவோரை நீர் கைவிடுவதில்லை' (திபா9:10). ஆண்டவர் பெயரை அறிந்துள்ள நம் அனைவருக்கும் இருக்க வேண்டிய ஒரே தகுதி நம்பிக்கைதான். நம்பிக்கை கொண்டு அவரைத் தேடி வரும் யாரையும் அவர்கள் எந்த நிலையில் இருந்தாலும் ஆண்டவர் அவர்களைப் புறக்கணிப்பதும் இல்லை; கைவிடுவதுமில்லை.' அவர்கள் என் மீது அன்பு கூர்ந்ததால் அவர்களை விடுவிப்பேன் அவர்கள் என் பெயரை அறிந்துள்ளதால் அவர்களைப் பாதுகாப்பேன்' ( திபா91:14) இந்த திருப்பாடல் வரிகள் நமது நம்பிக்கைக்கு வலுவூட்டுவதாக உள்ளன. யாரெல்லாம் இயேசுவை ஆண்டவராகவும், மீட்பராகவும் அறிந்து உள்ளுர

அனுபவிக்கின்றோமோ அவர்கள் அனைவரையும் ஆண்டவரும் அறிந்துள்ளார். எனவே, அவர்களை எல்லாத் தீங்கினின்றும் விடுவிக்கின்றார். பாதுகாக்கின்றார். தொடக்க நூலில் ஆகார் நம்பிக்கை அறிக்கை செய்வதை நாம் பார்க்கின்றோம். 'என்னைக் காண்பவரை நானும் இங்கே கண்டேன் அல்லவா? என்று அவள் சொல்லித் தன்னுடன் பேசிய ஆண்டவரை 'காண்கின்ற இறைவன் நீர்'என்று பெயரிட்டு அழைத்தாள்' (தொநூ16:13). எவ்வளவு ஆழமான நம்பிக்கை அறிக்கை. என்னைக் காண்பவரை நானும் கண்டேன். ஆண்டவர் எப்போதும் நம்மைக் காண்கிறவராகவே இருக்கின்றார். அவரில் ஆழமான நம்பிக்கை கொண்டவர்களால் மட்டுமே அவரைக் காண முடியும். அப்போதுதான் ஆகாரைப் போல் நாமும் அறிக்கையிட முடியும்.

நற்செய்தி பணியாளராக அழைக்கப்பட்ட பின்பும், செப வாழ்விற்கு நம்மைப் பழக்கப்படுத்திக் கொண்ட பின்பும் நாம் எதற்கெடுத்தாலும் பயப்படுகிறவர்களாகவே இருக்கின்றோம். எதிர்காலத்தைக் குறித்த பயம், பிள்ளைகளைக் குறித்த பயம், பயணம் செய்யும்போது பயம், சில மனிதர்களைக் கண்டு பயம், சூழ்நிலைகளைக் கண்டு பயம், இதற்கெல்லாம் உச்சமாக நமது மரணத்தை எண்ணிப் பயம். இப்படி எதற்கெடுத்தாலும் பயந்து நம் வாழ்க்கையின் மகிழ்ச்சி காலங்களைத் தொலைத்து விட்டு நிம்மதியின்றி இருக்கின்றோம். எசாயா இறைவாக்கினர் கூறியிருப்பது போல 'நம்பிக்கை கொண்டவர்கள் பதற்றமடைய மாட்டார்கள்' (எசா28:10) நம்பிக்கையில்லாமையால் நமது நிம்மதியையும் மகிழ்ச்சியையும் தொலைப்பது மட்டுமின்றி நம்மைச் சார்ந்துள்ள மற்றவர்களின் நிம்மதியையும் அமைதியையும் மகிழ்ச்சியும் தொலைத்து விடுவதற்கு காரணமாக மாறிவிடுகின்றோம்.

நானும் இந்தத் தொடரை ஆரம்பிக்கும் முன்பு நம்பிக்கையில் குறைவுபட்டுத்தான் இருந்தேன். நம்பிக்கை அடுத்து தொடங்க வேண்டுமே அதற்கான தகுதி நமக்கு இல்லையே என்று தனி செபத்தில் பல முறை அழுதிருக்கிறேன். தொடர்ந்து தூய ஆவியானவரிடம் செபிக்க ஆரம்பித்தேன். தூய ஆவியானவரே நம்பிக்கை பற்றி நான் எழுதத் தொடங்கும் முன்பே என்னைத் தகுதியாக்கும் என்று செபித்தேன். தூய ஆவியானவரும் என்னை வழிநடத்தியிருக்கின்றார். நம்பிக்கையில் உறுதிப்படுத்தியிருக்கின்றார். அதற்குச் சான்றாகப் பலவற்றைக் கூறமுடியும். என்னை நம்பிக்கையில் உறுதிப்படுத்திய ஆவியானவர் உங்களையும் வழிநடத்துவார், உறுதிப்படுத்துவார். ஏனென்றால் பணியாளர் வாழ்விற்கு அடித்தளமே நம்பிக்கைதான்.

நற்செய்திப் பணிக்குழுவின்
இணைய தளம்
www.arulchandrunilayam.org

'நம்மை நம்பியிருப்போருக்காகச் செயலாற்றும் கடவுள் உம்மையன்றி வேறு யார்? (எசா64:4) எல்லாவற்றிலும் எல்லாச் சூழ்நிலைகளிலும் அவரை மட்டுமே நம்பியிருந்தோமென்றால் கடவுள் நமக்காகச் செயலாற்றுவார். இதை திருவிவிலிய மாந்தர்களும் புனிதர்களும் வாழ்ந்து காட்டியிருக்கின்றார்கள். ஆண்டவரும் அவர்கள் அவரை நம்பியதால் வியத்தகு முறையில் அறிவியலுக்கும் மருத்துவத்திற்கும் அப்பாற்பட்ட நிகழ்வுகளையும் காரியங்களையும் ஆண்டவர் நிகழ்த்தியிருக்கிறார். நம் சார்பாக கடவுளின் திருமுன் நிற்கின்ற இயேசு ஆண்டவர் (எபி 9:24) நம் வாழ்விலும், வியத்தகு நம்ப முடியாத காரியங்களை நிறைவேற்றுவார். இறை நம்பிக்கைதான் பணியாளர் வாழ்வின் அடித்தளம்.

நற்பணி **ச.சகாயராணி,**
இராம்நகர்.

## திருவிவிலியமும் திருக்குறளும்

'அன்பே கடவுள்' தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதை விட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை (யோவா 15:13) என்றும் 'என் அன்பில் நிலைத்திருங்கள்' என்றும் கூறுகிறார் இயேசு.

அன்பு அனைத்தையும் பொறுத்துக் கொள்ளும்; அனைத்தையும் நம்பும். அனைத்திலும் மன உறுதியாய்இருக்கும். (1 கொரி 13:7) என்றும் நம்மீது அன்பு செலுத்தும் இயேசு கிறிஸ்து கடவுள் வடிவில் விளங்கிய அவர், கடவுளுக்கு இணையாய் இருக்கும் நிலையை வலிந்து பற்றிக் கொண்டிருக்க விரும்பவில்லை. (பிலி: 2:6). இவ்வுலக மக்கள் அனைவரையும் தனது தூய்மையான கலங்கமற்ற அன்பினால், சிலுவை மரணத்தின் வழியாக தியாக் பலியாக்கி தம் உயிரையும் கொடுத்து மீட்டார். திருக்குறளும் விவிலியத்தின் மேல் வரிச்சட்டமான அன்பை வலியுறுத்துகிறது.

> 'அன்பிலார் எல்லாம் தமக்குரியர், அன்புடையார்
> என்பும் உரியர் பிறர்க்கு' (அன்புடைமை : 72)

அன்பு இல்லாதவர் எல்லாம் தமக்கே உரிமையெனக் கொண்டாடுவர். அன்பு உடையவரோ தம் உடல், பொருள், ஆவி அனைத்தும் பிறர்க்கென எண்ணிடுவர்.

உலக மீட்பராகிய இயேசு கிறிஸ்துவும் நம்மை பாவத்திலிருந்து மீட்பதற்காக தம் உடல், பொருள், ஆவி அனைத்தையும் கொடுத்து, சிலுவை மரணம் வழியாக வாழ்வில் வெற்றி வாகை சூடினார். நாமும் அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி அவரது அன்பில் நிலைத்திருப்போம் . அந்த அன்பை மற்றவர்களுக்கும் வழங்குவோம்.

நற்பணி. **முத்து ஜூலியானா,** இராம்நகர்.

## இது சாத்தியமா?

புத்துயிர் செபம். சோர்ந்து போன உள்ளங்களைத் திடப்படுத்துகிறது. தள்ளாடும் முழங்கால்களை உறுதிப்படுத்துகிறது. பல்வேறு சிந்தனை கொண்ட பணியாளர்களின் அனுபவங்களை நாமும் பெற்றுக்கொள்ளும் தருணமாய் அமைகிறது. இறை வார்த்தைக்கான சரியான விளக்கங்களை பெற்றுக் கொள்ளவும் முடிகிறது. செப வேளைகளில் ரொம்ப முக்கியமான அழைப்பு, அலைபேசியில் வந்தால் போனை பயன்படுத்தாமல் இருப்பது சாத்தியமில்லை தானே!

அப்படியானால் யாருக்கு நாம் முக்கியத்துவம் கொடுக்கிறோம்? ஆண்டவரின் ஆசியுடன் கூடிய அழைப்புக்கா? அல்லது அலைபேசி அழைப்புக்கா? 'என்னிடம் வருபவர் தம் தந்தை, தாய், மனைவி, பிள்ளைகள், சகோதரர் சகோதரிகள் ஆகியோரையும் ஏன் தம் உயிரையுமே என்னை விட மேலாகக் கருதினால் அவர் என் சீடராய் இருக்க முடியாது' (லூக்.14: 26)

புதிய பணியாளர் பயிற்சிக்கு வந்திருந்த ஒரு சகோதரி என்னிடம் பகிர்ந்த போது 'புத்துயிர் செபம் நடந்து கொண்டிருக்கும்போதே பணியாளர்கள் அலைபேசியை பயன்படுத்தத்தானே செய்கிறார்கள்' என்று சொன்னது மனதிற்கு அதிக வலியை கொடுத்தது. பணிக்குழு பொறுப்பாளர்களே அலைபேசியை விவேகத்தோடும் நேர்த்தியோடும் கையாளும்போது பணியாளர்களாகிய நாம் கவனமாக இருக்கக் கூடாதா?

புத்துயிர் செபத்தின் மேன்மையையும் பொருளையும் உணர்ந்து இருந்தால் அலைபேசி அழைப்புகளை நேர்த்தியாக கையாள்வது சாத்தியம் தானே!

-நற்பணி **J. அருள் இளங்கோ,** இராம் நகர்.

## ஒரு பணியளாரின் மன்றாட்டு



எமக்கு நிறைவாழ்வை அளிக்கத் தண்டிக்கப்பட்டவரே இறைவா (எசா 53:5)

வருகிற தவக்காலம் வாடிக்கையானதாய் அமைந்து விடாமல், இன்னும் நெருங்கி உம்மோடு இணைந்து/புதுப்படைப்பாய் மாறிடவும் (2 கொரி 5:17), எங்கள் உள்ளம் புதுப்பிக்கப்பெற்று மாற்றம் அடையவும் (உரோ 12:2), மனம் மாறி உம்மிடம் முழுமையாய்த் திரும்பவும் (தி ப 3:19) எங்களுக்கு ஆற்றல் தர வேண்டுமென்று இறைவா உம்மிடம் மன்றாடுகிறேன்.

கடவுள்மேல் நம்பிக்கை வைத்து அவரை நோக்கிய பயணத்தில் அவரோடு நெருங்கிய உறவு கொள்ள உதவும் சிறந்த வழிமுறை செபம். செபத்தின் ஐந்து பரிமாணங்களைக் காண்போம்.

**1. விண்ணப்பச் செபம்.**

என்னிடம் மன்றாடு உனக்கு நான் செவி சாய்ப்பேன். நீ அறிந்திராத மாபெரும் செயல்களையும் மறைபொருள்களையும் உனக்கு நான் விளக்கிக் கூறுவேன் (எரே 33:3). அவரிடம் மன்றாடி பெற்றுக் கொள்ளலாம் என்ற உறுதியான நம்பிக்கை உள்ளவர்கள் ஏறெடுக்கும் விண்ணப்பம் இவர்கள் கடவுள் தனக்காக அனைத்தையும் செய்யவல்லவர் என்னும் நம்பிக்கையுள்ளவர்கள். எனவே இவர்களை நம்பிக்கையாளர்கள் அல்லது பக்தர்கள் என்று கருதலாம். அனைவரும் கடவுளிடம் தனக்கான தேவைகளை விண்ணப்பித்துக் கொண்டே இருக்கின்றார்கள். சிலர் அவர் கொடுக்கும் வரையில் அவரை விடுவதேயில்லை. சிலர் அதை சாதனை செபமாக்கி ம், பொருத்தனை செய்தும் சில பக்தி முயற்சிகள் செய்தும் வேண்டிக்கொள்கிறார்கள் அவர்கள் தங்களது தேவையை நிறைவேற்றிக் கொள்ளவும், நலமுடன் இருக்கவும் தன் குற்றத்துக்கு மன்னிப்பு பெறவும், கடவுளை நோக்கி ஏறெடுப்பதே விண்ணப்ப செபமாகும். இந்நிலையிலேயே பெரும்பாலான நம்பிக்கையாளர்கள் இருக்கிறார்கள். திருவிவிலியத்தில் காணப்படும் விண்ணப்பச் செபங்கள்.

அன்னா- குழந்தை வேண்டி செபித்தார். (1சாமு 1:10-11); சாலமோன் - ஞானம் வேண்டினார் (1 அர3:7-9); எசேக்கியா அரசர் - வாழ்நாள் நீடிக்க செபித்தார் (2 அர20:2-3); தாவீது - பாவ மன்னிப்புக்காக செபித்தார் (திபா 51:1-2).

**2. பரிந்துரை செபம்**

உன் மீது அன்பு கூர்வது போல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக (மாற்கு 12-21) என்ற வார்த்தைக்கு ஏற்ப தன்னைப் போல பிறரையும் நினைக்கும் ஆன்மீக வளர்ச்சி பெறுவதே இரண்டாம் நிலை. இந்நிலையில் இருப்பவர்கள் தனக்கு ஆசீர்வாதம் கடவுள் கொடுத்தாலும் மற்றவர்களுக்கும் அதைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் உள்ளவர்கள். திருவிவிலியத்தில் பரிந்துரை செபங்கள்.

அ.ஆபிரகாம் - சோதோமுக்காக பரிந்துரை செபம் (தொநூ 18:23-32); ஆ.மோசே - இஸ்ரயேல் மக்களுக்காக பரிந்துரை செபம் (விப 32:11); இ. தொடக்க திருஅவை - பேதுருவுக்காக செபித்தது (திப 12:5)

**3. உடனடித் தீர்வுக்காக செபம்.** கடவுளுக்குப் பணிந்து வாழுங்கள். அலகையை எதிர்த்து நில்லுங்கள். அப்பொழுது அது உங்களிடமிருந்து ஓடிப் போகும் (யாக் 4:7) என்ற இறைவார்த்தைக்கு ஏற்ப அலகையை எதிர்த்து நிற்கவும் அது விளைவிக்கும் தீமைகளுக்கு எதிராக செபிப்பது. இது பெரும்பாலும் உடனடி தீர்வுக்காக செபிக்கின்ற செபமாகவே அமைகின்றது.

இவ்வகை செபங்கள் மனிதனுக்காக இல்லாமல் அவனை அழிக்கின்ற காரணிகளை மையப்படுத்தியது. ஆன்மாவை மீட்க கடவுளிடமிருந்து அருளை பெற்றுக்கொண்டே ஆகவேண்டும் என்ற சூழலில் இவ்வகை செபங்கள் செய்யப்படுகின்றன. திருவிவிலியத்தில் வரும் உடனடித் தீர்வுக்கான செபம்.

1. தாவீது - எதிரிகளிடமிருந்து மீட்க செபம் . (திபா 18:1-3);

2. தானியேல் - கடவுளின் வார்த்தையை புரிந்துகொள்ள செபம்(தானி 10:2-13)

3. எலிசா - வேலைக்காரனின் ஆன்மீக பார்வை பெற செபி. (2 அர 6:16-17)

4. தொடக்க திரு அவை - பேதுருவும் யோவானும் துணிவுபெற செபம் (4:24-31) செபம்

**4. இறைவாக்கு செபம்**

அறுவடை மிகுதி வேலையாள்களோ குறைவு. ஆகையால் தமது அறுவடைக்குத் தேவையான வேலையாள்களை அனுப்பும்படி அறுவடையின் உரிமையாளரிடம் மன்றாடுங்கள் (லூக்கா 10:2) என்ற இறைவார்த்தைக்கு ஏற்ப கடவுளின் திட்டம் நிறைவேற செபிப்பது. இவ்வகை செபம் கடவுளை மகிமைப்படுத்துதலை மையப்படுத்தியது. இது பெரும்பாலும் தூய ஆவியாரோடு இணைந்து செபிக்கும் செபமாக அமைகின்றது. திருவிவிலியத்தில் காணப்படும் இறைவாக்கு செபங்கள்.

1. அன்னா செபம் (1 சாமு 2:1-10)

2. தாவீதின் செபம் (தி ப22:1-31)

3. வறட்சிக்கும், மழைக்கும் எலியாவின் செபம்

**5. அமைதி செபம்**

அமைதி கொண்டு, நானே கடவுள் என உணர்ந்து கொள்ளுங்கள். (திபா 46:10) என்ற இறைவார்த்தையின்படி நாம் பேசாமல் அவர் குரலைக் கேட்க அமைதியாக இருப்பது. எத்தகைய தேவையையும் முன் வைக்காமல் எதைப்பற்றியும் வருத்தப்படாமல் அவருடன் இருப்பதே போதுமென்ற உணர்வில் செபிப்பது. அவர் எது செய்தாலும் நமது நன்மைக்கே என்று அவரின் திருவுளத்திற்கு ஒப்புவிக்கும் நிலை. இந்நிலையில் ஆன்மா அவருடன் ஒன்றித்துவிடுவதால் அனைத்தும் அவர்களுடையதாகி விடுகிறது. எனவே கேட்பதற்கு ஒன்றும் இல்லை.

அ. எலியா (1 அர 19:11-13).

ஆ. மரியாள் (லூக்கா 10:39) .

இ. இயேசு (மாற்கு 1:35).

நமது செபம் எந்த நிலையில் உள்ளது? சிந்திப்போம்.

நற்பணி **ஜஸ்டின்,** பாம்பன்.

# நற்செய்திப் பணிக்குழு பணித்திட்டம்

| நாள் | நிகழ்வு | இடம் |
|---|---|---|
| 1.2.26. | தொடர் களப்பணி | கமுதி பங்கு, பெருமாள் குரும்பன் பட்டி |
| 01.2.26 | புதிய பணியாளர்கள் பயிற்சி | பரமக்குடி, காளையார்கோவில்<br>புதுக்கோட்டை, கோட்டைக்காடு |
| 04.2.26 | அருளமுது ஆதாரக்குழு கூடுகை | அமலஅன்னை அமைதியகம், காயாவயல்,<br>அருள்சான்று நிலையம், பரமக்குடி |
| 07.2.26 | பரிந்துரை செபம் | திரு இருதய ஆண்டவர் திருத்தலம்,<br>இடைக்காட்டூர் |
| 07.2.26 | புதிய பணியாளர்கள் பயிற்சி | புனித குழந்தை தெரசாள் கோவில்,<br>தங்கச்சிமடம் |
| 08.02.26 | புதிய பணியாளர்கள் பயிற்சி | புனித செபமாலை அன்னை கோவில்,<br>இராமநாதபுரம்<br>வியான்னி அருள்பணி மையம், சிவகங்கை<br>புனித அருளானந்தர் கோவில், ஓரியூர்<br>உலக இரட்சகர் கோவில், பட்டுக்கோட்டை<br>புனித மரியன்னை கோவில், பூதலூர் |
| 14.02.26 | அணித் தலைவர்கள் பயிற்சி | அமலஅன்னை அமைதியகம், காயாவயல்,<br>அருள்சான்று நிலையம், பரமக்குடி |
| 15.02.26 | புதிய பணியாளர்கள் பயிற்சி | அமலஅன்னை அமைதியகம், காயாவயல்,<br>புனித ஆரோக்கிய அன்னை ஆலயம், சாயல்குடி<br>புனித பேதுரு கோவில், சி.கே. மங்கலம்<br>புனித அடைக்கல அன்னை கோவில், திருமயம்<br>புனித லூர்தன்னை கோவில்,அம்மாபேட்டை |
| 22.02.26 | புதிய பணியாளர்கள் பயிற்சி | புனித பாத்திமா அன்னை கோவில், திருவாரூர்<br>குழந்தை இயேசு கோவில், நமணசமுத்திரம்<br>தூய ஆவியார் கோவில்,<br>இராஜசிங்கமங்கலம் |
| 22.2.26 | தவக்கால களப்பணி தொடக்கம் | பங்குகளில் |

**இப்ப இல்லாட்டி எப்ப ?**
-எல்லாரோ

**கடவுள்** நம்மை மன்னிப்பதில் **சோர்ந்து போவதில்லை.**
அவர் இரக்கத்தைப் பெற **நாம்தான் சோர்ந்து போகிறோம்.**

**இதை நாம் உணர்வது இப்ப இல்லாட்டி எப்ப?**

கொடியவர் தம் வழிமுறையையும், தீயவர் தம் எண்ணங்களையும் விட்டுவிடுவார்களாக; அவர்கள் ஆண்டவரிடம் திரும்பி வரட்டும்; அவர் அவர்களுக்கு இரக்கம் காட்டுவார்; அவர்கள் நம் கடவுளிடம் வரட்டும்; ஏனெனில், மன்னிப்பதில் அவர் தாராள மனத்தினர். **எசாயா 55:7**

| நாள் | மையயம் | வழிநடத்துபவர்கள் |
|---|---|---|
| 01.02.26 | அருள்சான்று நிலையம் பரமக்குடி | நற்பணி K. ஜஸ்டின் கபிரியேல்<br>நற்பணி J. சார்லஸ் |
| 01.02.26 | தந்தை ஜோசப் சேவியர் அரங்கம், காளையார்கோவில் | நற்பணி S. இராஜேந்திரன்<br>நற்பணி V. செங்கோல்மேரி |
| 07.02.26 | புனித குழந்தை தெரசாள் கோவில், தங்கச்சிமடம் | நற்பணி செயலர்<br>நற்பணி X. லூர்துமேரி |
| 08.02.26 | புனித செபமாலை அன்னை கோவில், இராமநாதபுரம் | நற்பணி GMS. ராணி<br>நற்பணி பெ. தெரசா மிரண்டா |
| 08.02.26 | வியான்னி அருள்பணிமையம் சிவகங்கை | நற்பணி A. பிரான்சிஸ்சேவியர்<br>செயலர் |
| 08.02.26 | புனித அருளானந்தர் திருத்தலம், ஓரியூர் | நற்பணி A. சந்தியேந்திரன்<br>நற்பணி P. அமலோற்பவஆரோக்கியராணி<br>நற்பணி இரா. அருள்பிரகாசம் |
| 15.02.26 | அமலஅன்னை அமைதியகம் காயாவயல் | Sr. செலின் பிரபா<br>நற்பணி S. சகாயராணி |
| 15.02.26 | புனித ஆரோக்கிய அன்னை கோவில், சாயல்குடி | நற்பணி M. அருள் மரியநாயகம்<br>நற்பணி A. ஆரோக்கியசாமி |
| 15.02.26 | புனித பேதுரு கோவில் சி.கே. மங்கலம் | நற்பணி J. மேரிபுஷ்பம்<br>நற்பணி A. சகாய தமிழ்செல்வி |
| 22.02.26 | தூய ஆவியார் கோவில் இராசசிங்கமங்கலம் | நற்பணி A. ஆரோக்கிமேரி<br>நற்பணி A. ஜான்சிமேரி<br>நற்பணி S. தைனஸ் மேரி |

| நாள் | மையம் | நெறியாளர்கள் |
|---|---|---|
| 01.02.26<br>I | திரு இருதய ஆண்டவர் கோவில், புதுக்கோட்டை | செயலர்<br>9787967272<br>நற்பணி J. அருள் இளங்கோ<br>9942434307 |
| 01.02.26<br>I | புனித சூசையப்பர் கோவில் கோட்டைக்காடு | நற்பணி A. சகாயராஜா<br>943569152<br>நற்பணி தை. அமல்ராஜா<br>9443983519 |
| 08.02.26<br>II | புனித மரியன்னை கோவில் பூதலூர் | நற்பணி A. சகாயராஜா<br>943569152<br>நற்பணி J. அருள் இளங்கோ<br>9942434307 |
| 08.02.26<br>II | உலக இரட்சகர் கோவில் பட்டுக்கோட்டை | நற்பணி M. மரியகிரகோரி<br>9486965799<br>நற்பணி S. மோட்ச அலங்காரம்<br>9843490206 |
| 15.02.26<br>III | புனித வளனார் கோவில் அம்மாபேட்டை | நற்பணி A.R. சூசைராஜ்<br>8248102600<br>செயலர்<br>9787967272 |
| 15.02.26<br>III | அடைக்கல மாதா கோவில் திருமயம் | நற்பணி L. ஆரோக்கியசாமி<br>9150579311<br>நற்பணி A. ஆரோக்கியசாமி<br>9843323439 |
| 22.02.26<br>IV | புனித பாத்திமா அன்னை கோவில், திருவாரூர் | நற்பணி S. மோட்ச அலங்காரம்<br>9843490206<br>செயலர்<br>9787967272 |
| 22.02.26<br>IV | குழந்தை இயேசு கோவில் நமணசமுத்திரம் | நற்பணி GMS. ராணி<br>9655264448<br>நற்பணி S. அந்தோணி பிரகாஷ்<br>9787791869 |

# புனித பிளாசியுஸ் (பிப்ரவரி 03)



புனித பிளாசியுஸ் கி.பி. 3-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கத்தோலிக்க மறைசாட்சி ஆவார். இவர் இன்றைய துருக்கியில் உள்ள செபாஸ்தே (Sebaste) என்ற நகரத்தின் ஆயராக இருந்தார். ஆரம்பத்தில் இவர் ஒரு சிறந்த மருத்துவராக பணியாற்றினார். தனது மருத்துவ அறிவை மக்களின் உடல் நலத்திற்கும், ஆன்மீக நலத்திற்கும் பயன்படுத்தினார். அவருடைய நல்லுணர்வு, கருணை, தியாக மனப்பான்மை ஆகியவற்றால் மக்கள் அவரை மிகவும் மதித்தனர்.

பின்னாளில் இவர் திரு அவையின் பணிக்காக ஆயராக நியமிக்கப்பட்டார். கிறிஸ்துவின் போதனைகளை அஞ்சாமல் அறிவித்தார். அக்காலத்தில் கிறிஸ்தவர்களுக்கு கடுமையான துன்புறுத்தல்கள் ஏற்பட்டன. உரோமப் பேரரசின் ஆட்சியில் கிறிஸ்தவ நம்பிக்கைய ஒழிக்க முயற்சிகள் நடந்தன. இந்த காலகட்டத்தில் புனித பிளாசியுஸ் கிறிஸ்துவின் மீது கொண்ட உறுதியான நம்பிக்கையால் பல துன்பங்களைச் சந்தித்தார்.


ஒரு முறை அவர் மலைப்பகுதியில் மறைந்து வாழ்ந்தபோது, காட்டு விலங்குகள் கூட அவரிடம் அமைதியாக பழகினதாக வரலாறு கூறுகிறது. அவருடைய செபத்தாலும் ஆசீர்வாதத்தாலும் பலர் குணமடைந்தனர். குறிப்பாக, ஒரு குழந்தை மீன் எலும்பு தொண்டையில் சிக்கி உயிர் ஆபத்தில் இருந்தபோது, புனித பிளாசியுஸ் செபித்ததன் மூலம் அந்தக் குழந்தை குணமடைந்தது. இதன் காரணமாக அவர் தொண்டை நோயாளிகளின் பாதுகாவலராக கருதப்படுகிறார்.

இறுதியில் அவர் கைது செய்யப்பட்டு கொடூரமாக சித்திரவதை செய்யப்பட்டார். ஆனால் கிறிஸ்துவை மறுக்கவில்லை கி.பி. 316 ஆம் ஆண்டில் அவர் மறைசாட்சியாக உயிர் தியாகம் செய்தார். திரு அவை அவரது தியாகத்தை நினைவுகூர்ந்து பிப்ரவரி 3 ஆம் நாளை புனித பிளாசியுஸ் திருநாளாகக் கொண்டாடுகிறது. இன்றும் அந்த நாளில் பல கோவில்களில் தொண்டை நோயாளர்களுக்காக செபிக்கும் மரபு உள்ளது.

**புனித பிளாசியுஸ் நமக்கு கற்பிப்பது**

விசுவாசத்தில் நிலைத்திருத்தல், பிறருக்கு சேவை செய்வது, துன்பங்களிலும் கடவுளை நம்புவது. புனித பிளாசியஸ் போல நம்பிக்கையில் நிலைத்திருந்து பிறருக்கு பணி செய்யும் பண்புகளை கற்றுக்கொள்வோம்.

நற்பணி **வே. செங்கோல்மேரி,** காளையார்கோவில்.




உளவியல் ஆலோசகரின் நுண் திறன்கள் (Microskills) பற்றி சுருக்கமாக பார்த்தோம். கடந்த பகுதியில் கேள்வி கேட்டல் திறன்' (Questioning Skill) பற்றி பார்த்தோம் இந்த பகுதியில் உளவியல் ஆலோசனை நுட்பங்களில் (Counselling Micro Skills) உள்ள முக்கியமான ஒரு நுட்பமான 'பிரதிபலித்தல்' (Reflecting) அல்லது 'மறுமொழியளித்தல்' பற்றி இப்பகுதியில் மிக தெளிவாக பார்ப்போம்.

பிரதிபலித்தல் என்பது. ஆலோசகர் (Counsellor). ஆலோசனையைப் பெற வந்தவர் (Client) வெளிப்படுத்திய உணர்வுகள் (Feelings). வார்த்தைகள் (Content). அல்லது ஆழமான அர்த்தங்களை (Meaning) மீண்டும் அவர் முன்னிலையிலேயே கூறி. அவர் பேசுவதைக் கவனத்துடன் கேட்டு உள்வாங்கிக் கொண்டோம் என்பதை உறுதிப்படுத்துவதாகும். இது ஒரு முக்கியமான செவிமடுத்தல் (Active Listening) நுட்பம் ஆகும்.

பிரதிபலித்தலின் முக்கியத்துவமும் நோக்கங்களும் (Importance and Objectives)

**பிரதிபலித்தல் நுட்பத்தைப் பயன்படுத்துவதன் முக்கிய நோக்கங்கள்:**

1. **ஆழமான செவிமடுத்தலை வெளிப்படுத்துதல்**: நீங்கள் பேசுவதைக் கேட்டுப் புரிந்து கொள்கிறேன் என்று ஆலோசனையைப் பெற வந்தவருக்கு உணர்த்துவது. இது அவர்களைப் பாதுகாப்பாக உணர வைத்து. மேலும் வெளிப்படையாகப் பேசத் தூண்டும்.

2. **உணர்வுகளைத் தெளிவுபடுத்துதல்:** அவர் சொன்னதைச் சுருக்கி அல்லது அவர் வெளிப்படுத்திய உணர்வைச் சரியாகப் பெயரிட்டுக் கூறுவதன் மூலம். ஆலோசனையைப் பெற வந்தவர் தங்கள் சொந்த உணர்வுகளையும். சிக்கல்களையும் தெளிவாகப் புரிந்துகொள்ள உதவுகிறது.

3. **ஆழமான புரிதலை ஊக்குவித்தல்:** சிலசமயம், ஆலோசனையைப் பெற வந்தவர் வெளிப்படையாகக் கூறாத ஆழமான அர்த்தங்களை (Hidden Meaning) பிரதிபலித்துக் காட்டும்போது, அவர் அந்த விஷயத்தைப் பற்றி இன்னும் ஆழமாகச் சிந்திக்கத் தொடங்குகிறார்.

4. சரியான புரிதலை உறுதிப்படுத்துதல்: ஆலோசகர், ஆலோசனையைப் பெற வந்தவர் சொன்னதைச் சரியாகத்தான் புரிந்து கொண்டாரா என்பதைச் சரிபார்க்க உதவுகிறது.

**பிரதிபலித்தலின் வகைகள்** (Types of Reflecting)

பிரதிபலித்தல் முக்கியமாக மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்படுகிறது.

1. **உணர்வுகளைப் பிரதிபலித்தல்** (Reflecting Feelings)

இதுவே மிகவும் பொதுவான மற்றும் சக்திவாய்ந்த நுட்பமாகும். ஆலோசனையைப் பெற வந்தவர் தங்கள் வார்த்தைகள், உடல்மொழி, மற்றும் குரலின் தொனி மூலம் வெளிப்படுத்தும் அடிப்படை உணர்வுகளை அடையாளம் கண்டு, அதை ஆலோசனையைப் பெற வந்தவர் முன்னிலையில் கூறுவது.

**நோக்கம்:** ஆலோசனையைப் பெற வந்தவர் தனது உணர்வுகளையும் அனுபவங்களையும் ஏற்றுக்கொண்டு அவற்றைப் புரிந்துகொள்ள உதவுவது.

**எடுத்துக்காட்டு:**

ஆலோசனையைப் பெற வந்தவர்: 'நான் நாள் முழுவதும் எவ்வளவு வேலை செய்தாலும், என் மேலதிகாரி என்னைக் கண்டு கொள்வதே இல்லை. நான் எவ்வளவு முயற்சி செய்தாலும் அது வீணாகப் போகிறது.'

**ஆலோசகரின் பிரதிபலிப்பு:** 'உங்கள் கடின உழைப்பு அங்கீகரிக்கப்படாமல் இருக்கும்போது ஏமாற்றமாகவும் (Frustrated) மதிப்பற்றவராகவும் (Unvalued) உணர்கிறீர்கள் என்று தெரிகிறது.'

2. **உள்ளடக்கத்தைப் பிரதிபலித்தல்** (Reflecting Content) - (Paraphrasing/ Parroting)

**நோக்கம்:** உரையாடலின் முக்கிய தகவலைத் தெளிவுபடுத்தி, அது சரியாகப் புரிந்து கொள்ளப்பட்டுள்ளதா என்பதைச் சரிபார்ப்பது.

**எடுத்துக்காட்டு:** ஆலோசனையைப் பெற வந்தவர்: 'எனக்கும் என் மனைவிக்கும் இடையே ஒரு பெரிய வாக்குவாதம் நடந்தது. அவர் என்னுடைய வேலையைப் பற்றி விமர்சித்தார், நான் என் குடும்பத்தைப் புறக்கணிக்கிறேன் என்று சொன்னார். அதனால், நான் மிகவும் கோபமடைந்து வீட்டை விட்டு வெளியேறினேன்.'

**ஆலோசகரின் பிரதிபலிப்பு:** 'உங்கள் வேலை குறித்து உங்கள் மனைவி விமர்சித்தபோது, நீங்கள் மிகவும் கோபமடைந்து வீட்டை விட்டு வெளியேறும் அளவுக்கு அந்தச் சண்டையின் உச்சக்கட்டம் இருந்தது என்று சுருக்கமாகப் புரிந்துகொள்கிறேன்.'

3. **ஆழமான அர்த்தங்களைப் பிரதிபலித்தல்** (Reflecting Meaning)

இது இரண்டு நுட்பங்களைக் காட்டிலும் ஆழமானது.

ஆலோசனையைப் பெற வந்தவர் சொன்ன வார்த்தைகள் மற்றும் உணர்வுகளின்

பின்னால் மறைந்திருக்கும் அடிப்படை மதிப்புகள் (Values), நம்பிக்கைகள் (Beliefs), மற்றும் வாழ்க்கை நோக்கங்களைப் (Life Purpose) பிரதிபலித்துக் கூறுவது.

**நோக்கம்:** ஆலோசனையைப் பெற வந்தவர் தங்கள் சொந்த வாழ்க்கையின் அடிப்படை நோக்கம், மதிப்புகள் போன்றவற்றைத் தெளிவுபடுத்தவும், சிக்கலின் மையத்தைப் புரிந்துகொள்ளவும் உதவுவது.

எடுத்துக்காட்டு: **ஆலோசனையைப் பெற வந்தவர்:** 'வேலை மாற்றம் காரணமாக என் குடும்பத்தை இன்னொரு ஊருக்குக் கூட்டிச் செல்ல வேண்டியுள்ளது. என் வேலைக்கு இது முக்கியம், ஆனால் என் மகளின் பள்ளி மாறும். என்னுடைய வளர்ச்சி எனக்கு மிகவும் முக்கியமானது.'

ஆலோசனையைப் பெற வந்தவர் சொன்னதிலுள்ள முக்கிய தகவல்களையும், வார்த்தைகளையும் ஆலோசகர் தனது சொந்த வார்த்தைகளில் சுருக்கி மீண்டும் கூறுவது. இது ஆலோசனையைப் பெற வந்தவர் பேசுவதைச் சரியாகக் கேட்டோம் என்பதை உறுதிப்படுத்துவதாகும்.

**ஆலோசகரின் பிரதிபலிப்பு:** 'நீங்கள் ஒருபுறம் உங்கள் தொழில் ரீதியான முன்னேற்றத்தைப் (Career Advancement) போற்றுகிறீர்கள் ஆனால் மறுபுறம் உங்கள் மகளின் ஸ்திரத்தன்மைக்குக் (Daughters Stability) குந்தகம் விளைவிப்பதன் மூலம் நீங்கள் குற்ற உணர்வுக்குள்ளாகி (Guilty) இருக்கிறீர்கள் என்று தெரிகிறது. உங்கள் தொழில் வளர்ச்சியும், குடும்பத்தின் நலனும் உங்களுக்கு சமமான முக்கியத்துவம் வாய்ந்ததுபோலத் தோன்றுகிறது.'

பிரதிபலித்தலைப் பயன்படுத்துவதற்கான வழிமுறைகள் (How to Use Reflecting)

பிரதிபலித்தல் எப்போதும் ஒரு வாக்கியமாகக் (Statement) இருக்க வேண்டும். கேள்வியாக (Question) இருக்கக்கூடாது. இதைப் பயன்படுத்த ஒரு எளிய வாக்கிய அமைப்பு:

1. **துவக்க வார்த்தை** (Stem): 'நீங்கள்...' 'எனவே நீங்கள் உணர்வது...', 'அப்படியானால், உங்களைப் பொறுத்தவரை...'

2. **உணர்வு/ உள்ளடக்கம்/ அர்த்தம்:** ஆலோசனையைப் பெற வந்தவர் சொன்ன உணர்வு, முக்கியத் தகவல், அல்லது உள்ளார்ந்த பொருள்.

3. **முடிவு வார்த்தை** (Tense / Closure): '...என்பது போலத் தெரிகிறது.' '...என்று நினைக்கிறீர்கள்.''..என்பதை நான் புரிந்துகொள்கிறேன்.'

பிரதிபலித்தல் என்பது ஆலோசகருக்கும் ஆலோசனையைப் பெற வந்தவருக்கும் இடையே நம்பிக்கையையும், ஆழமான தொடர்பையும் (Rapport) ஏற்படுத்த உதவும் மிகவும் அத்தியாவசியமான திறன்களில் ஒன்றாகும்.

**அசை போட அரை நிமிடம் :**

'பிரதிபலித்தல் என்ற நுண் திறன் ஆற்றுப்படுத்துதலின் மீது பிரமணிக்கத்தை ஏற்படுத்தும்'

சகோ. S.**ஜான் ஜோ பிரபாகர்.** SHJ.
மனநல ஆற்றுபடுத்துநர், பரமக்குடி.

## என்னை மன்னியும்

- நீ வெளியே போகும்போதும், உள்ளே வரும்போதும், இப்போதும், எப்போதும் ஆண்டவர் உம்மைக் காப்பார் என்பதை அறிந்தும் அவரது உடனிருப்பையும் பாதுகாப்பையும் மறநது வாழ்ந்து வந்ததை எண்ணி மனம் வருந்துகிறேன் இறைவா! என்னை மன்னியும் (திப. 123:8).

- தாய் தம் பிள்ளையைத் தேற்றுவது போல் நான் உங்களைத் தேற்றுவேன். என்பதை அறிந்திருந்தும் துன்ப வேளைகளில் இறைவனின் ஆறுதலை நாடாமல் வேற்று தெய்வங்களை நாடிச் சென்றதை எண்ணி மனம் வருந்துகிறேன் இறைவா! என்னை மன்னியும் (எசா 66:13).

- ஆண்டவரை நான் எக்காலமும் போற்றுவேன். அவரது புகழ் எப்பொழுதும் என் நாவில் ஒலிக்கும் என்ற அறிக்கையை மறந்து ஆண்டவரை போற்றிப் புகழ வாய்ப்பிருந்தும் அதைச் செய்யாமல் நேரத்தை வீணடித்து வாழ்ந்து வந்ததை எண்ணி மனம் வருந்துகிறேன் இறைவா! என்னை மன்னியும் (திப 34:1).

- தீமையை விட்டு விலகு, நன்மையே செய்திடு, அமைதியை நாடிடு, அதை அடைவதிலியேயே கருத்தாயிரு என்பதை மறந்து, நன்மை சொய்யாமல் தீமையோடு வாழ்ந்து வந்ததை எண்ணி மனம் வருந்துகிறேன் இறைவா! என்னை மன்னியும் (திப 34:14).

நற்பணி S.P. **சவரிமுத்து**, இராம்நகர்

## செப வீரர்களுக்கு

**ஆம் மாத செபக் கருத்து**

- குணப்படுத்த முடியாத நோயால் வேதனைப்படும் குழந்தைகளுக்காகவும் அவர்களின் குடும்பங்களுக்காகவும்
- போதிய மருத்துவ உதவியின்றி துன்புறும் குழந்தைகளுக்குத் தேவையான மருத்துவ உதவிகள் கிடைக்க
- சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் தமிழகத்தில் இறைவன் விரும்பும் நல்லாட்சி மலர.
- மதங்களால் மக்களைக் பிளவுபடுத்தும் பிற்போக்குத்தனங்களுக்கு எதிராக மக்கள் அமைப்புகள் எழுச்சியுடன் எழுந்து செயல்பட
- இந்தியாவில் சனநாயகம் மற்றும் மதச்சார்பின்மை கொள்கைகளும், அதைப் பேணும் நிறுவனங்களும் மாண்புடன் காக்கப்பட
- தவக்காலம் கத்தோலிக்க நம்பிக்கையாளர்களை கிறிஸ்து மைய வாழ்வில் ஆழப்படுத்த

**விரும்பத்தக்க செயல்பாடு:**

- ஒவ்வொரு நாளும் குடும்ப செபம் செபித்தல், குழந்தைகள் அனைவரையும் செபத்தில் பங்குபெறச் செய்தல்.



களப்பணி திறனாய்வு, அமைதியகம்



நற்செய்தி அறிவிப்புப் பயிற்சி, அமைதியகம்





இல்லச் சந்திப்பு செயல்முறை பயிற்சி, இடைக்காட்டூர் கூடுகை



அருளமுது ஆதாரக்குழுக் கூடுகை
பரமக்குடி



அருளமுது ஆதாரக்குழுக் கூடுகை
அமைதியகம்

## விண்ணகப்பிறப்பு


சி கே மங்கலம் வட்டாரத்தைச் சார்ந்த **நற்பணி ம.நம்பிக்கைமேரி** அவர்கள் 16.01.2026 அன்று விண்ணகப் பிறப்படைந்தார்கள்.
**அவர்களின் ஆன்மா இறைவனில் இளைப்பாற்றி அடையட்டும்.**



படங்களைக் கொண்டு இறைவார்த்தையை கண்டுபிடியுங்கள்?

படங்களைக் கொண்டு நினைவுக்கு வரும் இறைவார்த்தையை சட்டென்று சொல்லுங்கள் பார்ப்போம்.

துப்பு வேண்டுமா? **யோவேல் 1-3 அதிகாரங்களுக்குள்**



























வட்டார தியானக் கூட்டங்கள்













**Narseithi Paniyalar**
is published on behalf of the Commission for Proclamation,
Diocese of Sivagangai from Arulchandru Nilayam (Faith Resource Development Centre), Brothers of the Sacred Heart, Ulaganathapuram,
Paramakudi - 623 707, Ramnad Dist.
www.arulchandrunilayam.org |Email: arulchandrupmk@gmail.com